அதற்குப் பிறகு நகர சீரமைப்புத் திட்டத்தின் குழுவின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றால் மட்டுமே இதன் மேல் அரசு நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

ஏழாச்சேரி வரத்துக் கால்வாய்.

* 2572— திரு. வ. அன்பழகன் ;

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செய்யாறு தொகுதியில் உள்ள ஏழாச்சேரிக்கு வரும் வரத்துக் கால்வாயில் தூர் வாருவதுடன் சிமெண்ட் லைனிங்கும் செய்து தர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

இக்கால்வாய் ஏற்கெனவே வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் எடுத்துத் தூர் வாரப்பட்டிருக்கிறது. லைனிங் செய்யும் பணி, தூசி மாமண்டூர் ஏரி நவீனப்படுத்துகிற நேரத்தில் எடுத்துக்கொள்ளப் படும்.

திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த பட்ஜெட்டிலே நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தூசி மாமண்டூர் ஏரிக்கு, ஏரியை நவீனப்படுத்த ரூபாய் 1.33 கோடி அறிவித்து இருக்கிறார்கள். அப்படி அறிவிப்புச் செய்து, வரலாற்றில் ஒரு மிக முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறார்கள். தூசி மாமண்டூர் ஏரி என்று சொல்கிறபோது, தொகுதிக்கு ஒரு பெரிய நன்மை கிடைத்திருக்கிறது. ஏழாச்சேரி என்பது என்னுடைய சொந்த ஊராகும். எனவே, நான் பிறந்த மண்ணுக்குப் பெருமை சேர்க்கிற விதத்தில், அதைத் தவறாமல் இந்தத் திட்டத்திலே சேர்த்து நவீனப்படுத்தித் தருவாரா என்று உறுதிப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்கள்ள, தூசி மாமண்டூர் ஏரியில், 4-வது மதியிலேயிருந்து செல்கிற ஒரு கிளைக் கால்வாய்தான் ஏழாச்சேரி ஏரியினுடைய வரத்துக்கால்வாய். ஏற்கெனவே வறட்சி நிவாரணத்தில் 10 இலட்சம் ரூபாய் அதற்குச் செலவு செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல, இந்த ஆண்டு முதல்வர் கலைஞர் அவர்கள் ரூ. 138.20 இலட்சத்

திற்குத் தூசி மாமண்டூர் ஏரியைத் தூர் வாரி, கால்வாய் களை நவீனப்படுத்த பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். எனவே அந்த நேரத்தில் ஏழாச்சேரியினுடைய வரத்துக் கால்வாயும் கவனிக்கப்படும்.

புதியசாலைஅமைத்தல்.

* 3840—திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், மேலராமநதியிலிருந்து ப. மூலக்கரைப்பட்டி கிராம சாலைத் திட்டத்தில் புதிய சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கிராமச் சாலைகள் திட்ட ஏழாம் கட்ட ஒருங் கிணைந்த பணிகளில் ரூ. 80.00 கோடி திட்டத்தில் இந்தச் சாலைப்பணி இடம் பெற்றுள்ளது. நிதி நிலைமைக்கேற்ப வருங்காலத்தில் அரசின் நிர் வாக ஒப்புதல் பெற்று இந்தச் சாலைப்பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

9-20 மணி

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: தலைவர் அவர்களே, மேல ராமநதியிலிருந்து மூலக்கரைப்பட்டி கிராம சாலையினுடைய திட்டத்திலே, மேலராமநதியிலே 1,800 மக்கள் தொகைக்கு மேலாகவிருக்கிறது. மூலக்கரைப் பட்டி என்ற கிராமத்திலே 2,500 மக்கள் தொகைக்கு மேலாக விருக்கிறது. தூரமும் 4 கி.மீ. தான் இருக்கிறது. ஆகவே, அந்த இரண்டு ஊர்களையும் இணைக்கின்ற இந்தக் கிராம சாலைத் திட்டத்திலே இந்த ஆண்டிலேயே இந்தத் திட்டத்தை நிறை வேற்ற அரசும் அமைச்சரும் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS